பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2051 | ஆடி 07 | புதன்கிழமை 22.07.2020 | கதிர் 126

## ஓகஸ்ட் 1 முதல் முன்பள்ளிகள் ஆரம்பமாகும்

கொழும்பு, ஜூலை 22
ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் முன்பள்ளிகளை மீள ஆரம்பிக்க அரசு முடிவு செய்துள்ளது.

இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான இணக்கம் 2

### ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட

# முன்னாள் போராளியான கண்ணதாசன் விடுதலை

### மேன்முறையீட்டு நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு



(ந.லோகதயாளன்)

**யாழ்ப்பாணம், ஜூலை 23**

**ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் போராளி கண்ணதாசன் இன்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.**

**யாழ்.பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறை விரிவுரையாளரான கண்ணதாசனுக்கு வவுனியா மேல் நீதிமன்றம் வழங்கிய ஆயுள் தண்டனையை இரத்துச் செய்து அவரை விடுதலை செய்து அதிரடித் தீர்ப்பை வழங்கியுள்ளது மேன்முறையீட்டு நீதிமன்றம்.** 2

## இலங்கையர் மட்டுமே பிறப்புச் சான்றிதழ்களில்

கொழும்பு, ஜூலை 21
புதிய பிறப்புச் சான்றிதழ் அறிமுகப்படுத்தப்படவுள்ள நிலையில் அதில் இனம் வெளிப்படுத்தப்படமாட்டாது என்று பதிவாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

புதிதாக அறிமுகப்படுத்தப்படும் பிறப்புச் சான்றிதழில் இலங்கையர் என்று மட்டுமே இடம்பெறும்என்றுஅவர்சுட்டிக்காட்டியுள்ளார்.

தாய் - தந்தையரின் திருமண விவரங்கள் தொடர்பில் சமூகத்தில் சிறுவர்கள் 2

## தேர்தல் தொடர்பில் 4,363 முறைப்பாடுகள்

### பாரிய வன்முறைகள் எதுவும் இல்லை

கொழும்பு, ஜூலை 22
நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், தேர்தல் தொடர்பாக இதுவரை மொத்தமாக 4 ஆயிரத்து 363 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. 2



தேர்தல் பிரசாரத்துக்காக திருமலை சென்றுள்ள தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் நீதியரசர் விக்னேஸ்வரன் இன்று புதன்கிழமை திருகோணமலை மாவட்ட ஆயர் நோயல் இம்மானுவேல் ஆண்டகையை மரியாதை நிமித்தம் சந்தித்து உரையாடியனார்.

## சுற்றிவளைப்புகளில் 1,700 பேர் மாட்டினர்!

கொழும்பு, ஜூலை 22
நாட்டில்நேற்றுமுன்தினம்திங்கட்கிழமை நள்ளிரவு 12 மணி முதல் நேற்று செவ்வாய்க் கிழமை நள்ளிரவு 12 மணி வரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின் 2

## வாக்காளர் அட்டைகள் 60 சதவீதம் விநியோகம்

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகளில் 60 வீதமானவை விநியோகிக்கப்பட்டுள்ளன என்று தபால் திணைக்களம் அறிவித்துள்ளது.

எஞ்சியுள்ள வாக்காளர் அட்டைகளின் விநியோகம், எதிர்வரும் நாள்களில் நிறைவடையும் எனவும் தபால் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.




### கிளிநொச்சியில் யானை தாக்கி

## படுகாயமுற்ற விரிவுரையாளர் விமானம் மூலம் கொழும்புக்கு!

யாழ்ப்பாணம், ஜூலை 22
யானையின் தாக்குதலில் தலைப்பகுதியில் கடுமையாகக் காயமடைந்த யாழ். பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாக தொழில்நுட்ப பீட விரிவுரையாளர் காயத்திரி டில்றுக்ஷி (வயது - 32) கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பப்பட்டார்.

விமானப்படை விமானத்தில் அவர் இன்று கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள விகாரைக்குச் 2




## தமிழர் ஆசிரியர் சங்கம் கூட்டமைப்புக்கு ஆதரவு

யாழ்ப்பாணம், ஜூலை 23
நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமது ஆதரவை வழங்க வுள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது. 2

## கந்தக்காட்டில் மோதல்; ஐந்து பேர் படுகாயம்!

கொழும்பு, ஜூலை 22
கந்தக்காடு தனிமைப்படுத்தல் மத்தியநிலையத்தில்இருகுழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் ஐவர் காயமடைந்துள்ளனர். 2

## சுற்றிவளைப்புகளில் ..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
போது, பல்வேறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் 1,700 பேர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள், ஆயுதங்கள், வெடிபொருள், சட்டவிரோத மதுபானம் வைத்திருந்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இச்சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்களில் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட 276 பேரும், ஏனைய குற்றங்களை இழைத்த குற்றச்சாட்டுகளில் 691 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை, ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் 268 பேரும், கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் 147 பேரும், ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்தகுற்றச்சாட்டில் 07 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஆயுதங்கள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 03 பேரும், வெடிபொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரும், சட்டவிரோத மதுபானம் வைத்திருந்த குற்றச்சாட்டில் 307 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## படுகாயமுற்ற ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சென்றுவிட்டு வரும்போது, அவரும் இன்னொரு விரிவுரையாளரும் காட்டு யானையை எதிர்கொண்டனர். இதன் போது அவர்கள் வெவ்வேறு பக்கமாக ஓடியபோதும் டில்றுக்ஷ யானைத் தாக்குதலுக்கு இலக்கானார்.

அவர் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார். அவர் கோமா நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார். இந்நிலையிலேயே அவர் இன்று மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

## தமிழர் ஆசிரியர் சங்கம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளவர்களில் செயலாற்றல், ஆளுமை, மொழித்திறன் உள்ளவர்களைத் தெரிவு செய்யுமாறும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிலைப்பாடு தொடர்பாக அந்தச் சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் குமாரசாமி அருணாசலம் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

2020 ஒகஸ்ட் 05ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமது ஆதரவை வழங்குவதற்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தீர்மானித்துள்ளது.

சங்க உறுப்பினர்கள் தேர்தல் சட்ட விதிகளுக்கு அமைவாகச் செயற்பட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றிக்குப் பங்களிப்புச் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தமது சங்கத்தின் தற்போதைய தலைவர் இரா.சச்சிதானந்தன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளமையுடன் சங்கத்தின் முன் னாள் பொதுச் செயலாளரும் சங்கத்தின் ஆலோசகருமான த.மகாசிவத்தின் பெயர் தேசியப் பட்டியலில் குறிப்பிடப்பட் டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையின் கோரிக்கைக்கு அமைய வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 20 உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் வகையில்அனைத்துஉறுப்பினர்களும் செயற்படவேண்டும் - என்றுள்ளது.

## கந்தக்காட்டில் மோதல்;....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்றுபுதன்கிழமைஅதிகாலையில் அந்த நிலையத்தில் அனுமதிக்கப்பட்டவர்களே இவ்வாறு மோதலில் ஈடுபட்டுள்ளனர் என வெலிகந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் கந்தக்காடு, சேனபுர ஆகிய மத்திய நிலையங்களில் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்கள் எனக் குறிப்பிடப்படுகின்றது.

காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாக வெலிகந்தை பொலிஸார் கூறினர்.

## முன்னாள் போராளி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினரான கண்ணதாசன் கட்டாய ஆட்சேர்ப்பில் ஈடுபட்டார் எனக் குற்றம்சாட்டப்பட்டு தொடரப்பட்ட வழக்கில் வவுனியா மேல் நீதிமன்றத்தால் அவருக்கு ஆயுட்கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து கண்ணதாசன் மேன்முறையீடு செய்திருந்தார். குறித்த வழக்கின் விளக்கம் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனால் எழுத்தில் வழங்கப்பட்ட நிலையில் கடந்த மே மாதம் 13ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கு விசாரணையின்போது போதிய சாட்சிகள் இன்மையால் வவுனியா மேல் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பை நியாயப்படுத்த முடியவில்லை என்றும், அதனால் மீண்டும் விசாரணை வேண்டும் என்றும் சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் முன்னிலையான பிரதி மன்றாடியார் குமார் ரட்ண கோரிக்கை முன்வைத்து அதற்கு இணக்கம் கோரினார்.

ஏற்கனவே இடம்பெற்ற விசாரணையை நியாப்படுத்த முடியவில்லை என சட்டமா அதிபர் திணைக்களம் ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் குற்றம் சாட்டப்பட்டவர் விடுவிக்கப்பட வேண்டுமே அன்றி மீள் விசாரணைக்கு இணங்க முடியாது என ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, அன்றைய தினம் குற்றவாளியும் மன்றுக்கு அழைத்து வரப்பட்டிருக்கவில்லை. அதனால் குற்றம் சாட்டப்பட்டவரையும் அழைத்து வருமாறும் மீள் விசாரணையா அல்லது விடுதலையா என்பதை இன்றைய தினம் தெரிவிப்பதாகக் கூறி குறித்த வழக்கு இன்றுவரை ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் இந்த வழக்கு இன்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. நீதியரசர்களான அச்சல வெங்கப்புலி மற்றும் பிரியங்க பெர்னாண்டோ ஆகியோர் கண்ணதாசனுக்கு வவுனியா மேல் நீதிமன்றம் வழங்கிய ஆயுள் தண்டனைத் தீர்ப்பை இரத்துச் செய்து அவரை விடுதலை செய்தனர். சட்டமா அதிபர் தீர்மானித்தால் மீண்டும் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யலாம் எனவும் நீதியரசர்கள் தீர்ப்பளித்தனர்.

மூன்று ஆண்டுகளுக்கு மேலாக சிறைத்தண்டனை அனுபவித்த கண்ணதாசன் மிருதங்கக் கலையின் நுணுக்கங்கள் குறித்த 'பஞ்ச நடையில் தனியாவர்த்தனம்' என்ற நூலை சிறையிலிருந்து எழுதினார். அந்த நூலை அவருடைய குடும்பத்தினர் யாழ்ப்பாணத்தில் வெளியிட்டுவைத்திருந்தமைகுறிப்பிடத்தக்கது.

## ஒகஸ்ட் 1 முதல் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஏற்பட்டது எனச் சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

கொரோனா அச்சுறுத்தலை யடுத்து கடந்த சில மாதங்களாக பாடசாலைகள், முன்பள்ளிகள் மூடப்பட்டி ருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கு கடத்தவிருந்த 600 கிலோ மஞ்சள் சிக்கியது



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் , ஜூலை 22

இந்தியாவில்இருந்துஇலங்கைக்குக் கடத்தவிருந்த 600 கிலோ மஞ்சள் நேற்று இந்தியக் கரையோர காவல் படையினரால் கைப்பற்றப்பட்டது.

இந்தியாவில் ஓர் ஹைஏஸ் வாகனத்தில் எடுத்து வரப்பட்டு கடற்கரைக்கு படகில் ஏற்றும் நோக்கில் எடுத்துச் சென்ற சமயமே மஞ்சள் கைப்பற்றப்பட்டதோடு அதனை எடுத்துச் சென்ற இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஒரு கிலோ 300 ரூபா முதல் 400 ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட மஞ்சள் இலங்கையில் இறக்குமதி தடை செய்யப்பட்டமையாலும் கொரோனா தாக்கத்துக்கு கிருமிகளை அழிக்கும் வல்லமை மஞ்சளுக்கு உண்டு எனக் கூறப்பட்டதை அடுத்து ஏற்பட்ட அதிக நுகர்வினாலும் தற்போது ஒரு கிலோ 3 ஆயிரம் ரூபா முதல் 3 ஆயிரத்து 500 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது. இதனாலேயே மஞ்சள் கடத்தப்படுவதாகக் கூறப்பட்டது.

## தேர்தல் தொடர்பில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தேசிய தேர்தல் முறைப்பாட்டு மத்திய நிலையத்திற்கு 897 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு மத்திய நிலையத்திற்கு 3 ஆயிரத்து 466 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

இந்தநிலையில், நேற்றுமுன்தினம் மாலை 4 மணி முதல், நேற்று மாலை 4 மணி வரையான 24 மணித்தியாலங்களில் 178 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையத்துக்கு 30 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையத்துக்கு 148 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, பாரிய வன்முறைகள் தொடர்பில் இதுவரை எவ்வித முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை எனத் தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

## அங்கஜனின் விஞ்ஞாபனம் இன்று யாழில் வெளியீடு



(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம், ஜூலை

சிறிலங்கா சுகந்திரக் கட்சியின் யாழ் தேர்தல் மாவட்ட என் கனவு யாழ் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று ரில்கோ விருந்தினர் விடுதியில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

சிறிலங்கா சுகந்திரக் கட்சியின் யாழ் தேர்தல் மாவட்ட வேட்பாளர்கள் முன்னிலையில் முதன்மை வேட்பாளர் அங்கஜன் இராமநாதன் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டார். அதன் முதற் பிரதியை சிவயோகக் குருக்கள் பெற்றுக்கொண்டார்.

இந்ததேர்தல் விஞ்ஞாபனத்தில் கட்சி அமைப்பாளர்கள்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## இலங்கையர் மட்டுமே .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கருத்திற் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாகப் பதிவாளர் நாயகம் என்.சீ. விதானகே தெரிவித்துள்ளார்.

அதேவேளை, நாட்டின் அனைத்து குடிமக்களின் புதிய பிறப்புச் சான்றிதழ்களில் இலங்கையர் எனக் குறிப்பிடப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிறப்பின்போது ஆள் அடையாளத்தை உறுத்திப்படுத்தும் வகையில் வழங்கப்படும் 12 இலக்கங்களே பிற்காலத்தில் தேசிய அடையாள அட்டைகள் உள்ளிட்ட ஆவணங்களை வழங்குவதற்கு பயன்படுத்தப்படவுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இதுவரை காலமும் பிறப்புச் சான்றிதழில் 'இலங்கை தமிழர்' என்றோ அல்லது அது போன்றோ குறிப்பிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir
பத்திரிகைத்துறை வெற்றிடங்கள்
☛ உதவி ஆசிரியர்
☛ ஒப்பு நோக்கர்கள்
முன் அனுபவம் உள்ளவர்களுக்கு
முக்கியத்துவம் வழங்கப்படும்
தொடர்புகளுக்கு -
காலைக்கதிர்
இல - 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நீக்குவது அவ்வளவு சுலபமானதல்ல

பொதுத் தேர்தலின் பின்னர் வரக் கூடிய பொதுஜன பெரமுன அரசு, புதிய அரசமைப்பை உருவாக்க முயற்சிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழர்களுக்கு அதிகாரங்கள் பகிரப்படுவதை ஆட்சேபிக்கின்ற பல கட்சிகள் அந்தத் தரப்பின் கூட்டில் இருக்கின்றமையால், அக்கட்சியினரின் செல்வாக்குக் காரணமாக புதிய அரசமைப்பு முயற்சிகளின் போது, இப்போதைய அரசமைப்பில் இருக்கும் அதிகாரப் பரவலாக்கல் ஏற்பாடுகள் வெட்டிக் குறைக்கப்படலாம் அல்லது நீக்கப்படலாம் என அவதானிகள் கருதுகின்றனர்.

ஆட்சித் தலைவர்களின் கருத்தும் அதை ஒத்ததாகவே உள்ளன.

இதனால் அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் மூலம் கொண்டு வரப்பட்ட அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகளும் அகற்றப்படலாம் என்று பரவலாகப் பேசப்படுகின்றது.

மொட்டுக் கட்சிகாரர்கள் தரப்பில் பொதுஜன பெரமுன பக்கத்தில் சில தீவிர பேரினவாதப் போக்குத் தலைவர்கள் இதனை உறுதிப்படுத்தியுள்ளனர்.

ஆனால், அத்தரப்பில் உள்ள இடதுசாரி மிதவாதத் தலைவரான அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அதனை மறுக்கின்றார்.

சில ஆளும் தரப்பு அரசியல்வாதிகள் தாங்கள் அரசியலில் பிரபல்யம் பெறுவதற்காக அப்படித் தெரிவித்துக் கொள்கின்றார்கள் என்று காரணம் கூறும் வாசுதேவ நாணயக்கார, அப்படி 13 ஆவது திருத்தம் நீக்கப்பட முடியாமைக்கு இரண்டு காரணங்களைச் சுட்டிக்காட்டுகின்றார்.

ஒன்று - பதின்மூன்றாவது திருத்தம் மூலமான அதிகாரப் பகிர்வு நீக்கப்பட்டால் பலவீனமான அரச நிர்வாகத் தோற்றம் பெறும்.

அடுத்தது - தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வாக இலங்கை - இந்திய நாடுகளை உள்ளடக்கிச் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் தோற்றம் பெற்றதே இந்த மாகாண சபை விவகாரம். அதனை ஒரு தலைப்பட்சமாக யாராலும் இரத்துச் செய்ய முடியாது. இதுவரை காலமும் எவராலும் அதைச் செய்ய முடியவில்லை என்பதையும் வாசுதேவ நாணயக்கார சுட்டிக்காட்டுகின்றார்.

அது மிகச் சரியான - மிகக் கச்சிதமான - கூற்று.

அது நாட்டின் பிரதமரும், புதிதாக மீளவும் பொறுப்பேற்கக் கூடிய அரசுத் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷவுக்கு நன்கு தெரியும். அனுபவ ரீதியாகப் புரியும்.

2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் பெரு வெற்றியீட்டிய மஹிந்த ராஜபக்ஷ அதன் பின்னர் அரசமைப்பை மாற்றியமைக்க நடவடிக்கை எடுத்தார்.

ஒருவர் எத்தனை தடவையும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியும் என்ற வகையில் அரசமைப்புக்கான 18 ஆவது திருத்தத்தை அப்போதுதான் அவர் வெற்றிகரமாக நிறைவேற்றித் தமக்கேற்றவாறு சட்டத்தை மாற்றிக் கொண்டார்.

குதிரையோட்டப் பேரம் மூலம் எதிர்க்கட்சிகளில் இருந்து பல எம்.பிக்களைத் தம்பக்கம் வளைத்துப் போட்டு, அரசமைப்புத் திருத்தத்துக்குத் தேவையான மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைப் பலத்தை அப்போது அவர் பெற்றுக் கொண்டார். அந்த ஆட்சிக் காலம் முழுவதும் - 2015 ஜனவரியில் ஜனாதிபதித் தேர்தலில் தாம் தோல்வியுறும் வரையில் - அந்த மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவு என்ற பலம் அவரிடம் இருந்தது.

அச்சமயத்திலும் இப்படி ஒரு தடவை 13 ஆவது திருத்தத்தில் கூறப்பட்ட அதிகாரப் பரவலாக்கலை மேலும் நீர்த்துப் போகச் செய்யும் வகையில் அரசமைப்புத் திருத்தம் ஒன்றைக் கொண்டு வர அவர் தரப்பு முயற்சி எடுத்தது.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் மூலம் கொண்டு வரப்பட்டு நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கும் காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்குப் பரவலாக்கும் ஏற்பாடுகள் உட்பட பலவற்றை அரசமைப்பிலிருந்து நீக்கும் முன் முயற்சியை அவரது அப்போதைய அரசு ஆரம்பித்தது.

இதனை ஆட்சேபித்து கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அப்போது இந்தியப் பிரதமரின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகராக இருந்த சிவசங்கர் மேனனிடம் தொலைபேசி மூலம் முறைப்பாடு செய்தார்.

உடனடியாகவே இவ் விடயம் குறித்து அப்போதைய இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் பேச்சு நடத்தினர் சிவசங்கர் மேனன்.

அதனையடுத்து அடுத்த ஓரிரு நாள்களிலேயே இந்திய விமானப்படை விமானத்தில் கொழும்புக்கு விசேடமாகப் பறந்து வந்த இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், இந்தியப் பிரதமரின் கடுமையான வாசகங்கள் அடங்கிய செய்தி ஒன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளித்தார்.

கையளித்தமை மட்டுமல்லாமல், கொழும்பில் இருந்தபடி கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தனைத் தொலைபேசியில் தொடர்பு கொண்ட சிவசங்கர் மேனன், 13 ஆவது திருத்தத்தை மாற்றும் முயற்சி கைவிடப்படுவதான உறுதி மொழியை இலங்கை ஜனாதிபதி தங்களுக்கு அளித்திருக்கின்றார் என்றும், இலங்கை ஜனாதிபதியே சம்பந்தனை அழைத்துப் பேசுவரார் என்றும் கூறி விட்டுச் சென்றார்.

அவர் கூறியபடி அன்றிரவே சம்பந்தனுடன் தொலைபேசியில் பேசிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அடுத்த ஓரிரு நாள்களில் சம்பந்தனை நேரில் கூப்பிட்டு விரிவான பேச்சு நடத்தினார்.

இந்தியாவில் காங்கிரஸ் அரசு ஆட்சியில் இருந்தபோது கட்டவிழ்ந்த உண்மை விவகாரம் இது.

இந்திய அரசு மாறினாலும், மோடியின் தலைமையும் இலங்கை விவகாரத்தை இதே போன்ற கண் கொண்டுதான்நோக்கும் என்று நம்பலாம்.

எனவே 13 ஆம் திருத்தத்தை நீக்குவது குறித்து மொட்டுக் கட்சிக்காரர்கள் அதிகம் பேசினாலும், அதை முன்னெடுப்பது அவ்வளவு இலகுவானதல்ல. பட்டறிவு அதனைத்தான் எமக்குப் போதித்து நிற்கின்றது.

## வடமராட்சி மீனவர்களின் வழக்கு திங்கட்கிழமைக்கு ஒத்திவைப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜூலை23

வடமராட்சி கடல்பிரதேசத்தில் தென்னிலங்கையில் இருந்து வந்து அத்துமீறித் தொழில் செய்வோருக்கு எதிராக வடமராட்சி மீனவர் சங்க சமாசங்கள் சார்பில் பருத்தித்துறை நீதி மன்றில் தாக்கல் செய்த வழக்கில் மாவட்ட நீரியல்வளத் துறையினரை திங்கட்கிழமை ஆஜராகுமாறு பருத்தித்துறை நீதிமன்றம் கட்ட ளையிட்டது.

வடமராட்சிக் கடல்பிரதேசத்தில் தென்னிலங்கையில் இருந்து வந்து அத்துமீறித் தொழில் செய்வோருக்கு எதிராகக் கடந்த ஆண்டு ஏ.ஆர்.2019/341 இலக்க வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நிலையில் பருத்தித்துறை நீதிமன்றம் இடைக்கால தடை விதித்து இரு வாரங்களிற்கு ஒரு தடவை அது நீடிக்கப்பட்டு வந்த நிலையில் இனி அவ்வாறு நீடிக்கத் தேவையில்லை எனப் பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்த கூற்றின் அடிப்படையில் பின்னர் அது கைவிடப்பட்டு இருந்தது.

இருந்தபோதும் இதேவகையான அத்துமீறிய தொழில் மீண்டும் இடம்பெறுவதனால் சமாசப் பிரதிநிதிகள் தமது சட்டத்தரணி ஊடாக நகர்த்தல் பத்திரம் ஒன்றை மன்றில் சமர்ப்பித்த நிலையில் குறித்த வழக்கு நேற்றைய தினம் விளக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வாறு இடம்பெறும் வழக்கில் சமாச பிரதிநிதிகள் சார்பில் சட்டத்தரணி தி.சந்திரசேகரனுடன் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் ஆஜராகியமையோடு நிலைமையை நீதிமன்றத்துக்கு விளக்கினார்.

இந்தப் பகுதியில் கடலட்டைத் தொழில் புரிய திணைக்களம் அனுமதி வழங்கியிருப்பினும் அது நிபந்தனைகளுடன்தான் வழங்கப்பட்டது. எந்தவிதமான நிபந்தனைகளும் பின்பற்றாது தான் தொழில் இடம் பெறுவதனால் உள்ளூர் மீனவர்கள் முழுமையாகப் பாதிக்கப்படுகின் றனர். இதற்காகத் தற்போது உள்ளூர் மீனவர்கள் பணிப் புறக்கணிப்பிலும் ஈடுபடுகின்றனர். இதே நேரம் சில உள்ளூர் சங்கங்கள் அனுமதிக் கடிதங்களை வழங்கியிருப்பினும் அவற்றில் காணப்பட்ட குறைபாட்டின் அடிப்படையிலேயே கடந்த காலத்தில் தடை செய்யப்பட்டது. எனவே அந்த வகை அனுமதியைத் தற்போதும் தடை செய்ய வேண்டும் என ஜனாதிபதி சட்டத் தரணி எம்.ஏ.சுமந்தரன் தனது சமர்ப்பணத்தை முன் வைத்தார்.

இவற்றினை ஆராய்ந்த மன்று மாவட்ட நீரியல்வளத் திணைக்கள அதிகாரிக்கான அழைப்பாணை அனுப்புமாறும் அன்றைய தினம் இது தொடர்பில் பரிசீலிப்பதாகவும் தெரிவித்து எதிர்வரும் திங்கட்கிழமைக்கு வழக்கை ஒத்திவைத்தது.

## அரசியல் கைதிகள் விடயத்தை அரசுடன் பேசியே தீர்க்க முடியும்

### அதன் வலி எனக்குத் தெரியும் என்கிறார் கனகரட்ணம்



சிறைச்சாலைகளில் வாடும் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான விடயத்தை அரசுடன் பேசியே தீர்க்க முடியும். எனது மகனும் 11 வருடங்களாக சிறையில் இருப்பதால் அதன் வலி எனக்குத் தெரியும்.

– இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் வன்னி மாவட்ட வேட்பாளருமான சதாசிவம் கனகரட்ணம் தெரிவித்தார்.

வவுனியா தமிழ் ஊடக சங்கத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:–

தற்போதைய ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருடன் எனக்கு நெருக்கமான தொடர்பு இருக்கின்றது. அரசு சார்பில் வன்னி மாவட்டத்தில் இருந்து இருவர் தெரிவுசெய்யப்படக் கூடிய நிலை இருக்கின்றது. அதில் ஒரு தமிழனை நீங்கள் அனுப்ப வேண்டும்.

வன்னி மாவட்டத்தில் நீண்ட காலமாக அரசுடன் சேர்ந்து மக்கள் பிரதிநிதியாக இருந்த தமிழர் ஒருவரும் இல்லை. ஆகவே, இந்தத் தேர்தலை சரியாக மக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அவ்வாறு தெரிவு செய்தால் வன்னிப் பிரதேசத்தில் இருக்கும் அனைத்து விடயங்களையும் செய்யக் கூடியதாக இருக்கும்.

வன்னி போரால் பாதிக்கப்பட்ட பிரதேசம். இங்குள்ள மக்கள் துன்பங்களையும், துயரங்களையும் சுமந்து கொண்டிருக்கின்றார்கள். அரசுடன் இணைந்து நாம் அவர்களின் துயரங்களைப் போக்க வேண்டும். கடந்த காலத்தில் நடைபெற்ற அபிவிருத்தி, வேலைவாய்ப்பு என்பன தமிழ் மக்களிடம் வருவது குறைவு. இதனைப் புரிந்துகொள்ள வேண்டும்.

எனக்குப் போடப்படும் வாக்கு முதன்மை வேட்பாளருக்குச் செல்லும் எனத் தப்பான ஒரு கருத்தை சிலர் பரப்பி வருகிறார்கள். ஆனால், அப்படியல்ல. ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும் விருப்பு வாக்குகளே கவனத்தில் கொள்ளப்படும் என்பதை மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். கூடுதலான வாக்குளைப் பெறுபவரே தெரிவு செய்யப்படுவார். இதனை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். மஹிந்த அரசால்தான் எமது அழிந்து போன மாவட்டத்தை கட்டியெழுப்ப முடியும்.

அரசியல் கைதிகள் விடயம், காணி விடுவிப்பு, காணாமல்போனோர் பிரச்சினை தொடர்பில் அரசுடன் பேசியே தீர்வைப் பெற முடியும். போரின்போது உயிரிழப்புக்கள் ஏற்பட்டன. போராளிகள், மக்கள் எனப் பலரும் கொல்லப்பட்டார்கள். போர் முடிந்த பின் அவை நிறுத்தப்பட்டுள்ளன.

தேசியம் பேசுபவர்களுக்கு நாம் எதிரானவர்கள் அல்லர். அவர்கள் வரட்டும். ஆனால், அரசுக்குள் ஒரு தமிழன் வர வேண்டும். அதற்காக மக்கள் செயற்பட வேண்டும். அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான ஒரு சந்தர்பத்தை கடந்த ஜனாதிபதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கியிருந்தார். ரணிலா அல்லது மஹிந்தவா பிரதமர் என்ற நிலை வந்தபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனை செய்திருக்க முடியும்.

அப்போது மஹிந்தவுக்கு ஆதரவு கொடுத்தால் சில பிரச்சினைகளைத் தீர்ப்பதாக வாக்குறுதி வழங்கினார்கள். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்பட்டது. அப்போது அரசியல் கைதிகளை விடுதலை செய்யுங்கள், காணிகளை விடுவியுங்கள் எனப் பேசியிருக்கலாம். ஆனால், அதைச் செய்யாமல் அரசிடம் சோரம் போனார்கள்.

எனக்கு அதிக மக்கள் வாக்களித்தால் மக்கள் என்னுடனும், அரசுடனும் இருக்கின்றார்கள் என்பதைக் காட்டி இப்பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். எனது பிள்ளையும் 11 வருடமாக சிறையில் இருக்கின்றார். அந்த வலி எனக்குத் தெரியும். இங்குள்ள மக்களின் வலிகளைச் சுமந்தவன் என்ற வகையில் அரசுடன் பேரம் பேச முடியும் – என்றார்.

# 5 வயது மகன் மற்றும் 4 வயது மகளை கழுத்தை நெரித்துக் கொன்ற தந்தை

## சிவகாசி அருகே நடந்த சம்பவம்

பெற்ற பிள்ளைகளைக் கொலை செய்து சடலத்தின் அருகே அமர்ந்திருந்த தந்தையின் செயல் ஊர் மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

சிவகாசி அருகேயுள்ள செங்கமலப்பட்டி கிராமத்தில் தனது 5 வயது மகன், 4 வயது மகளைத் தந்தையே கழுத்தை நெரித்துக் கொலை செய்த சம்பவம் அரங்கேறியுள்ளது. கொல்லப்பட்ட சிறுவர்களை அம்புலன்ஸில் கொண்டு சென்றபோது ஊரே கூடி அழுத சம்பவம் பார்ப்பவர்களைக் கண் கலங்கச் செய்தது.

விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே உள்ள செங்கமலப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த காளிராஜ். வயது 27. மனைவி தங்கபுஸ்பம். வயது 26. காளிதாஸ் – தங்கபுஸ்பம் தம்பதிக்கு 5 வயதில் மாரிஸ்வரன் என்ற மகனும்,4 வயதில் காயத்திரி என்ற மகளும் உள்ளனர்.

காளிராஜ் வேலைக்குச் செல்வதில்லை. ஊர் சுற்றுவதை வழக்கமாகக் கொண்டிருப்பவர். காளிதாஸ் மனைவி தங்கபுஸ்பம் அப்பகுதியில் உள்ள தனியார் பட்டாசு ஆலையில் பணி புரிந்து வருகிறார்.

வழக்கம்போல் நேற்று தங்கபுஸ்பம் பட்டாசு ஆலைக்கு வேலைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பியுள்ளார். அப்போது குழந்தைகள் இருவரும் படுத்திருந்துள்ளனர். சரி குழந்தைகள் தூங்கி விட்டனர் என நினைத்துள்ளார். சிறிது நேரத்தில் குழந்தைகளை எழுப்பியபோது எந்த உணர்வுமின்றி அவர்கள் படுத்துக் கிடந்துள்ளனர்.

அதிர்ந்துபோன தங்கபுஸ்பம், என்னவென்று காளிராஜ்ஜிடம் விசாரித்துள்ளார். குழந்தைகளைக் கழுத்து நெறித்துத் தனது கணவனே கொலை செய்திருப்பதை அறிந்து கொண்ட தங்கபுஸ்பம் கதறி அழுதுள்ளார். சத்தம் கேட்டு சம்பவ இடத்திற்கு அக்கம் பக்கத்தினர் விரைந்துள்ளனர். குழந்தைகளில் பிரேதத்தைப் பார்த்து அதிர்ச்சியடைந்த அவர்கள், சம்பவம் குறித்து சிவகாசி கிழக்கு பொலிஸூக்குத் தகவல் அளித்தனர்.

தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் குழந்தைகளின் உடலை மீட்டு பிரேதப் பரிசோதனைக்காகச் சிவகாசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அதேபோல் வழக்குப் பதிவு செய்து குழந்தைகளின் தந்தை காளிராஜ்ஜையும் கைது செய்தனர். கழுத்தை நெறித்து குழந்தைகளைக் கொலை செய்ய வேண்டிய காரணம் என்னவென்பது குறித்து சிவகாசி பொலிஸார் காளிதாசிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஹெலிக்கொப்டரில் இருந்து டாங்கிகளை அழிக்கும் துருவஸ்திரா ஏவுகணை சோதனை

ஹெலிக்கொப்டரில் இருந்து எதிரிகளின் டாங்கிகளை தாக்கி அழிக்கும் துருவஸ்திரா ஏவுகணை சோதனை, ஒடிசா மாநிலம் பாலசோரில் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது.

கடந்த 15 மற்றும் 16 ஆம் திகதி ஹெலிக்கொப்டர் இன்றி ஏவுகணை சோதித்துப் பார்க்கப்பட்ட வீடியோ காட்சி தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

எதிரிகளின் இராணுவ டாங்கிகளை தாக்கி அழிக்கும் மூன்றாவது தலைமுறை ஏவுகணை அமைப்பான ஹெலினா, இந்திய இராணுவத்தில் ஏற்கனவே இணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அனைத்துப் பருவ காலங்களிலும், பகல் மற்றும் இரவிலும் தாக்குதல் நடத்த முடியும். தற்போது அதனை மேம்படுத்தி துருவஸ்திரா ஏவுகணை உருவாக்கப்பட்டுள்ளது.

இதனைக் கொண்டு எதிரிகளின் இராணுவ டாங்கிகள் மீது நேர் எதிராகவும், மேல் நோக்கிய படி இருந்தும் தாக்குதல் நடத்த முடியும். இந்த ஏவுகணை 500 மீற்றர் முதல் 7 கிலோ மீற்றர் தூரம் வரை சென்று தாக்குதல் நடத்தும் வல்லமை கொண்டது.

1.9 மீற்றர் நீளமும், 45 கிலோஎடையும்கொண்டதுருவஸ்திரா ஏவுகணை, நொடிக்கு 240 மீற்றர் வேகத்தில் செல்லக்கூடியது. 4 லான்ச்சர்கள் உதவியுடன் 8 ஏவுகணைகளை ஹெலிக்கொப்டரில் பொருத்த முடியும்.

# நலமுடனே உள்ளார் நளினி கழுத்தில் காயம் ஏதுமில்லை

## சிறை மருத்துவர் தகவல்



வேலூர்,ஜுலை22

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ள நளினி தற்கொலைக்கு முயற்சி செய்த நிலையில் அவரது உடல்நிலை சீராக உள்ளதாக சிறைத் துறை மருத்துவர் தெரிவித்துள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் வேலூர் மகளிர் சிறையில் ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் நளினி நேற்று முன் தினம் இரவு மற்றொரு குற்றவாளியை துன்புறுத்தியதாக குற்றம்சாட்டப்பட்ட பின்னர் தற்கொலைக்கு முயன்றார் எனத் தகவல்கள் வெளியாகின.

இதுகுறித்து நளினியின் வழக்கறிஞர் புகழேந்தி, நளினி சிறை அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட பின்னர் தற்கொலைக்கு முயன்றார் எனத் தெரிவித்தார். இந்த நிலையில் நளினியின் உயிருக்கு ஆபத்து இருப்பதாகக் கூறி வழக்கறிஞர் புகழேந்தி நளினியை சென்னை புழல் சிறைக்கு மாற்ற வேண்டும் என சிறை அதிகாரிகள் மற்றும் முதல்வருக்கு கோரிக்கை வைத்துள்ளார்.



# சிகாகோவில் இறுதிச்சடங்கில் மர்ம நபர்கள் சூடு; 14 பேர் காயம்

அமெரிக்காவின் சிகாகோ நகரில் இறுதிச் சடங்கு நிகழ்ச்சியின் போது நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டில் 14பேர் காயம் அடைந்தனர். **Auburn Gresham** என்ற இடத்தில் இறுதிச்சடங்கு நிகழ்ச்சியை முடித்து விட்டு திரும்பியவர்கள் மீது காரில் வந்த மர்ம நபர்கள் திடீரெனத் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இதில் படுகாயம் அடைந்தவர்கள் அனைவரும் சிகிச்சைக்காக பல்வேறு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக தீயணைப்புத் துறையினர் தெரிவித்தனர். இந்த சம்பவம் எதற்காக, ஏன் நடைபெற்றது என்பது குறித்த விவரம் ஏதும் தெரியவில்லை.



# கொரோனாத் தடுப்பு நடவடிக்கையாக திறந்த வெளியில் முடி வெட்டும் சலூன்

## அமெ. கலிபோர்னியா ஆளுநர் உத்தரவு



அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில், கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த, முடி திருத்தும் நிலையங்களை திறந்த வெளியில் செயல்படுமாறு, ஆளுநர் **Gavin Newsom**, உத்தரவிட்டுள்ளார்.

இரண்டரை மாத கொரோனா ஊரடங்குக்குப் பின், முடி திருத்தும் நிலையங்கள் மீண்டும் செயல்பட தொடங்கிய நிலையில், கொரோனா தொற்று வேகமாகப் பரவியதால், ஆளுநர் ஹிஸைழவிலிது, முடி திருத்தும் நிலையங்களை, திறந்த வெளியில் மட்டும் செயல்பட அனுமதிக்கப் போவதாக அறிவித்தார்.

இதையடுத்து, ஒரு சில முடி திருத்தும் கலைஞர்கள் திறந்த வெளியில் சிகை அலங்காரம் செய்ய துவங்கினர். பொதுமக்கள் பெரும்பாலானோர் இதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர்.

# 11 சீன நிறுவனங்களின் மீது அமெ. பொருளாதாரத் தடை



மனித உரிமை மீறலில் ஈடுபட்ட 11 சீன நிறுவனங்கள் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ளது.

உய்குர் மக்களை அதிகளவில் சிறையில் அடைப்பது, அவர்களைக் கட்டாயப் படுத்தி வேலை வாங்குவது, அனுமதியின்றி அவர்களின் தனித்தகவல்களை சேகரிப்பது உள்ளிட்ட அடக்குமுறைகளை சீன அரசு செய்து வந் தது.

உய்குர் மக்கள் மீது நடத்தப்படும் அடக்குமுறைகளைக் கண்டித்துள்ள, அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மைக் பாம்பியோ, அவர்களை சீனா நடத்தும் விதம் இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய கறை என விமர்சித்துள்ளார். இந்நிலையில், 11 சீன நிறுவனங்கள் மீது பொருளாதாரத் தடை விதித்திருப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

# ஒன்றரைக் கோடிப் பேருக்கு உலகில் கொரோனா பாதிப்பு

## 6 லட்சத்துக்கும் அதிகமானோர் மரணம் 91 லட்சம் பேர் நோயிலிருந்து மீண்டனர்



உலக அளவில் புதிதாக 2லட்சத்து 39ஆயிரம் பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளதால், இதுவரை பெருந்தொற்றால் பாதிக்கப் பட்டோர் எண்ணிக்கை ஒன்றரைக் கோடியைக் கடந்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் அமெரிக்காவில் அதிகபட்சமாக 67ஆயிரம் பேருக்கு நோய்த்தொற்று பாதிப்பு உறுதியானதால், அங்கு, மொத்த பாதிப்பு எண்ணிக்கை 40 லட்சத்தைத் தாண்டியுள்ளது.

பிரேசிலில் 44ஆயிரம் பேர் ஒரே நாளில் கொரோனா பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர். பல்வேறு நாடுகளில் ஒரே நாளில் 5ஆயிரத்து600 பேர் வரை கொரோனாவுக்கு உயிரிழந்ததால், மொத்த பலி எண்ணிக்கை 6லட்சத்து 19ஆயிரமாக அதிகரித்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் பிரேசிலில் 1300 பேரும், அமெரிக்காவில் 1100 பேரும் பலியாகியுள்ளனர். அமெரிக்காவில் மொத்த பலி எண்ணிக்கை ஒரு லட்சத்து 44ஆயிரமாகவும், பிரேசிலில் 81ஆயிரமாகவும் உள்ளது.

அதேசமயம் வைரஸ் பாதிப்பில் இருந்து குணமடைந்தவர்கள் எண்ணிக்கையும் 91 லட்சத்தை கடந்துள்ளது.

# 2020 இறுதியில் கொரோனா தடுப்பூசி வெளியாவது இன்னும் உறுதி இல்லை

## ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் தெரிவிப்பு

பிரிட்டன் ஒக்ஸ்போர் பல்கலைக்கழகம் கண்டுபிடித்துள்ள கொரோனா தடுப்பூசி இந்த ஆண்டு இறுதிக்குள் தயாராகி விடும் என்று உறுதியாகச் சொல்வதற்கில்லை என்று அதே பல்கலைக்கழகத்தின் தடுப்பூசித் துறை பேராசிரியர் சாரா கில்பர்ட் தெரிவித்துள்ளார்.

பி.பி.சிக்கு அளித்த பேட்டியில், அடுத்தடுத்த கட்ட சோதனைகளிலும் இந்த தடுப்பூசியின் வெற்றியை பரிசோதிக்கும் தேவை உள்ளதாக அவர் கூறினார்.



தடுப்பூசியை பெருமளவில் உற்பத்தி செய்வதுடன், அவசரகால பயன்பாட்டுக்கு மருந்து கட்டுப்பாட்டு துறையின் அனுமதி கிடைக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதிக நபர்களிடம் கொரோனா தடுப்பூசியை சோதித்து பார்க்கும் முன் இந்த 3 நடவடிக்கைகளையும் செய்து முடிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தடுப்பூசியை பெருமளவில் உற்பத்தி செய்ய ஆஸ்ட்ராஜெனேகா நிறுவனம் தயாராக இருந்தாலும், பிரிட்டனில் தொற்று பரவல் குறைந்துள்ளதால், அதை சோதித்துப் பார்ப்பதில் தாமதம் ஏற்படும் எனக் கூறப்படுகிறது.

# பெற்றோரைக் கொன்ற தலிபான் தீவிரவாதிகளை காத்திருந்து சுட்டுக் கொன்று பழி தீர்த்த யுவதி

பெற்றோரைச் சுட்டுக்கொன்ற மூன்று தலிபான் தீவிரவாதிகளை ஏ.கே.47 துப்பாக்கியால் ஆப்கானிஸ்தான் பெண் ஒருவர் சுட்டுக் கொன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆப்கானிஸ்தான், கோர் மாகாணத்தில் கெரிவே என்ற கிராமம் உள்ளது. இந்தக் கிராமத்தில்தான் 16 வயதான காமர் குல் தன் தாய் தந்தையுடன் வசித்து வந்தார். கெரிவே கிராமத்தை ஜூலை 17 ஆம் திகதி நாற்பதுக்கும் மேற்பட்ட தலிபான் பயங்கரவாதிகள் சூழ்ந்தனர். பின்னர் கிராம மக்களில் அரசுக்கு ஆதரவானவர்கள், அரசுக்குத் தகவல் அளிப்பவர்கள், முன்னாள் இராணுவ வீரர்கள், கிளர்ச்சிக்கு ஒத்துழைக்காதவர்கள் எனப் பலரையும் வீடு புகுந்து சுட்டுக் கொல்லத் தொடங்கினர்.

காமர் குல் வீட்டுக் கதவையும் தீவிரவாதிகள் தட்டினர். நள்ளிரவு நேரத்தில் கதவு படபடவென்று தட்டப்பட்டதைக் கேட்டு, காமர் குல்லின் தாய் கதவைத் திறந்துள்ளார். வீட்டுக்கு வெளியே ஆயுதங்களுடன் தலிபான் தீவிரவாதிகள் நிற்பதைப் பார்த்து பயந்து போன அவர் உடனடியாக கதவைச் சாத்தியுள்ளார். இதனால், ஆத்திரமடைந்த தலிபான் தீவிரவாதிகள் கதவுக்கு வெளியே நின்றபடியே துப்பாக்கியால் சராமாரியாக சுட்டுள்ளனர். குண்டடி பட்ட காமர் குல்லின் தாய் சம்பவ இடத்திலேயே இறந்துள்ளார்.

பின்னர், கதவை உடைத்துக் கொண்டு வீட்டுக்குள் புகுந்த தீவிரவாதிகள் காமர்குல்லின் தந்தையையும் சுட்டுக் கொன்றனர். காமர் குல் மற்றும் அவரது 12 வயது தம்பியான ஹபிபுல்லா ஆகிய இருவர் மட்டும் தீவிரவாதிகள் கண்ணில் படாதவாறு வீட்டுக்குள் ஒரு பகுதியில் ஒளிந்திருந்து தப்பித்தனர். பெற்றோரை கொன்றவர்களை பழி வாங்க வேண்டும் என்று தீர்மானித்தார் காமர் குல். தலிபான் தீவிரவாதிகளைத் தேடிச் சென்று தன் பெற்றோரைக் கொன்ற மூன்று தீவிரவாதிகளை ஏ.கே 47 துப்பாக்கியால் சுட்டுக் கொன்று பழிதீர்த்துள்ள சம்பவம் ஆப்கானிஸ்தானில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கையில் ஏ.கே 47 துப்பாக்கியுடன் அமர்ந்திருக்கும் காமர் குல்லின் படமும் தற்போது வைரலாகியுள்ளது.

தாய் தந்தையரின் இழப்பு ஈடு செய்ய முடியாதது.



ஆனால், இந்தப் பழிவாங்கும் நடவடிக்கை மனதுக்கு சற்று அமைதியைத் தந்திருக்கும். துணிச்சலின் அடையாளமாக மாறியுள்ளார் இந்தப் பெண் என்று காமர் குல்லின் செயலைப் பலதரப்பினரும் பாராட்டி வருகிறார்கள்.

தற்போது, காமர்குல்லும் அவரது தம்பியும் கோர் மாகாணத்தில் பாதுகாப்பான இடத்தில் வைக்கப்பட்டுள்ளனர் எனச் சொல்லப்படுகிறது.

செல்வம் அடைக்கலநாதன் உள்ளிட்ட

# தமிழ்க் கூட்டமைப்பின் வேட்பாளர்களுக்கு கோடிக்கணக்கான பணம் எப்படி வந்தது?

## விக்கி கட்சியின் வேட்பாளர் குணசீலன் கேள்வி

செல்வம் அடைக்கலநாதன் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களுக்கு கோடிக்கணக்கான பணம் எங்கிருந்து வந்தது?"

– இவ்வாறு வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட வேட்பாளருமான ஞா.குணசீலன் கேள்வி எழுப்பியுள்ளார்.

மன்னாரில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரச வேட்பாளர்களுக்குச் சமமான அளவிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கோடிக்கணக்கான பணத்தை இந்தப் பொதுத்தேர்தலில் செலவு செய்கின்றார்கள்.

செல்வம் அடைக்கலநாதன் உள்ளிட்ட கூட்டமைப்பின் முன்னாள் உறுப்பினர்களுக்குப் பணம் எங்கிருந்து வந்தது? அந்தப் பணத்தை அவர்கள் எங்கிருந்து பெற்றார்கள்?

இவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்தபோது மக்களுக்குப் போய்ச் சேர வேண்டிய பணத்தைக் கொள்ளையடித்துக்கொண்டு இன்று மீண்டும் தேர்தலில் களமிறங்கியுள்ளார்கள்.

இவர்களுக்கு இம்முறை மக்கள் உரிய பாடம் புகட்ட வேண்டும். தமிழ் மக்கள் தேசியக் கூட்டணிக்கே மக்கள் வாக்களிக்க வேண்டும். மக்கள் ஆணையுடன் நாம் நாடாளுமன்றம் சென்றால் நீதியின் வழியில் சேவையாற்றுவோம். மக்களின் குறைகளைத் தீர்த்து வைப்போம் – என்றார்.

# ரிஷாத்தின் தாராபுரம் கூட்டம்; பொலிஸ் விசாரணை வலையில்

ந.லோகதயாளன்

மன்னார் தாராபுரத்தில் கடந்த 18ஆம் திகதி முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நடத்தினார் எனக் கூறப்படும் கூட்டம் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக அவ்விடயம் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களை வலயக் கல்வித் திணைக்களத்தின் ஓர் உதவிக் கல்விப் பணிப்பாளரே ஆசிரியர் கடமையின் நிமித்தம் எனத் தெரிவித்து அழைத்தார் எனவும், அக்கூட்டத்திலேயே தேர்தல் பரப்புரையும் இடம்பெற்றமையோடு மாதக் கொடுப்பனவுப் பட்டியலில் ஒப்பம் பெறப்பட்டமையோடு கலந்துரையாடலின் நிறைவில் ஆசிரியர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 2 ஆயிரம் ரூபா பணமும் ஓர் சாறியும் கொண்ட பார்சல் வழங்கப்பட்டதாகவும் மாவட்டத் தேர்தல் அதிகாரியிடம் செய்யப்பட்ட முறைப்பாட்டினை மாவட்ட அதிகாரி விசாரணைக்கு உட்படுத்தியுள்ளார்.

அவ்வாறு மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் தேர்தல் அதிகாரி இரண்டாம் முறைப்பாட்டாளராகப் பொலிஸாரிடம் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் தற்போது பொலிஸார் இந்த விடயம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேநேரம் அந்தக் கல்வி அதிகாரி ஒப்பம் பெற்ற கொடுப்பனவுப் பட்டியல் இதுவரை வலயக் கல்வித் திணைக்களத்தில் ஒப்படைக்கப்படவில்லை எனவும் தேர்தல் திணைக்களத்தின் அறிக்கை கிடைத்தவுடன் கல்வித் திணைக்களமும் திணைக்கள ரீதியிலான நடவடிக்கையில் இறங்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# கிணற்றிலிருந்து 14 மோட்டர் ஷெல்கள் ஓமந்தை குஞ்சுக்குளம் பகுதியில் மீட்பு





வவுனியா, ஜூலை 22

வவுனியா ஓமந்தை குஞ்சுக்குளம் பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து 14 மோட்டர் ஷெல்கள் மீட்கப்பட்டுள்ளன.

இன்று மதியம் விசேட அதிரடிப் படையினர் மற்றும் ஓமந்தை பொலிசார் இணைந்து இதனை மீட்டனர்.

வவுனியா, ஓமந்தை, குஞ்சுக்குளம் பகுதியை சேர்ந்த மார்க்கண்டு சிவகுமார் எனும் நபர் தனது விவசாயக் கிணற்றினை நீர் இறைத்து கிணற்றினைத் துப்பரவு செய்த போது கிணற்றினுள் வெடிபொருள்கள் காணப்பட்டதினையடுத்து ஓமந்தைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து அங்கு சென்ற பாதுகாப்பு தரப்பினர் கிணற்றைப் பரிசோதித்தனர். மேலும் வெடிபொருள்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் ஓமந்தை பொலிஸார் ஊடாக வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தின் அனுமதியினைப் பெற்று புளியங்குளம் விசேட அதிரடிப்படையினர் மூலம் கிணற்றிக்குள் தேடுதல் நடத்தினர்.

இதன் போது கிணற்றிலிருந்து 14 மோட்டார் ஷெல்கள் மீட்கப்பட்டு செயலிக்க செய்வதற்காக விசேட அதிரடிப்படையினரினால் எடுத்துச் செல்லப்பட்டன.

# '13' திருத்தத்தில் அரசு கைவைக்க முடியாது!

## அரசமைப்பின் பிரகாரம் தமிழருக்குத் தீர்வு வழங்கப்பட வேண்டுமென வாசு வலியுறுத்து



கொழும்பு, ஜூலை 22

புதிய நாடாளுமன்றத்தில் அரசமைப்பின் 13ஆவது திருத்தம் இல்லாதொழிக்கப்படும் என்று ஆளுந்தரப்பு அரசியல்வாதிகள் பிரபல்யமாகுவதற்குக் தெரிவித்துக்கொள்கின்றார்கள். 13ஆவது திருத்தத்தை இரத்துச் செய்தால் பலவீனமாக அரச நிர்வாகம் தோற்றம் பெறும். இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இரு நாடுகளை உள்ளடக்கி செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் தோற்றம் பெற்ற மாகாண சபை முறைமையை இரத்துச் செய்யவே முடியாது. இதுவரை காலமும் அது எவராலும் இயலாத ஒரு காரியமாகவே உள்ளது. இனியும் அவ்வாறே இருக்கும்.

– இவ்வாறு முன்னாள் இராஜாங்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ ஒருமித்த நாட்டுக்குள் 13ஆவது அரசமைப்பின் திருத்தம் ஊடாக அதிகாரப் பகிர்வு வழங்கப்படும் என்று கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ளமை ஏற்றுக்கொள்ளக் கூடியது.

தமிழ் மக்களுக்கு அரசமைப்பின் பிரகாரம் தீர்வு வழங்கப்பட வேண்டும். அந்தத் தீர்வு ஒருமித்த நாட்டுக்குள் முரண்படாத விதத்தில் அமைய வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு. இதில் எக்காலத்திலும், எக்காரணிகளுக்காவும் ஒருபோதும் மாற்றம் ஏற்படாது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி பொதுத்தேர்தலுக்கான கொள்கைப் பிரகடனத்தை இம்முறை வெளியிடவில்லை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் வெளியிட்ட சுபீட்சமான எதிர்காலத்துக்கான கொள்கையை 52.25 சதவீத மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். நிறைவுபெற்ற 8 மாத காலத்தில் இந்த ஆதரவு சதவீதம் உயர்வடைந்துள்ளதே தவிர குறைவடையவில்லை.

ஜனாதிபதியின் கொள்கைத் திட்டங்களை புதிய அரசில் முழுமையாகச் செயற்படுத்த ஆளும் தரப்பில் கூட்டணியமைத்துள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்கள், உறுப்பினர்கள் இணக்கம் தெரிவித்துள்ளார்கள். ஆகவே, இவ்வாறான நிலையில் பொதுத் தேர்தலுக்கான பொதுஜன முன்னணி தனித்துக் கொள்கைத் திட்டத்தை தயாரித்தால் நிறைவேற்றுத்துறைக்கும், சட்டத்துறைக்கும் இடையில் வீண்முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான புதிய அரசில் ஒருமித்த நாட்டுக்குள் முரண்பாடற்ற வித்தில் மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்படும். புதிய அரசில் இனங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படமாட்டாது. அபிவிருத்திகளுக்கு மாத்திரமே முன்னுரிமை வழங்கப்படும் – என்றார்.

# கிளிநொச்சி ஊடகவியலாளரை அச்சுறுத்தி போர் குறித்து போர்

கிளிநொச்சி, ஜூலை 22

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றத்துக்கு செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர் ஒருவரை நீதிமன்றின் முன்பாக வைத்து கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் உள்ளிட்ட இருவர் புகைப்படம் எடுத்து அச்சுறுத்தியமை தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றத்திற்கு இன்று காலை செய்தி சேகரிப்பதற்காகச் சென்ற ஊடகவியலாளர் ஒருவரை நீதிமன்ற நுழைவாயிலுக்கு அண்மித்த பகுதியில் வைத்து கரைச்சி பிரதேச சபையின் சுயேச்சைக் குழு உறுப்பினர் மற்றும் அவருடன் வந்த மற்றுமொருவர் தொலைபேசியில் புகைப்படம் எடுத்துள்ளனர்.

இதுதொடர்பில் கேட்டபோது படம் தேவையென்று தெரிவித்துவிட்டு மீண்டும் ஊடகவியலாளர் பயணித்த மோட்டார் சைக்கிளையும் படம் எடுத்து இருவரும் அச்சுறுத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நீதிமன்ற காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டதையடுத்து புகைப்படம் எடுத்தவர் தொடர்பான விவரங்களை பெற்று கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு அனுப்பினர். அத்துடன் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

# திருகோணமலை காளி கோவிலில் விக்னேஸ்வரன் குழு இன்று வழிபாடு

திருகோணமலை, ஜூலை 22

திருகோணமலைக்கு தேர்தல் பிரசாரத்துக்காக சென்றுள்ள தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் நீதியரசர் விக்னேஸ்வரன் இன்று புதன்கிழமை திருக்கோணாமலை ஆதிபத்திர காளி அம்மன் ஆலயத்துக்குச் சென்று வழிபாடு நடத்தினார்.

திருகோணமலை மாவட்டதில் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி சார்பில் போட்டியிடும் முதன்மை வேட்பாளர் ரூபன் உட்பட ஏனைய வேட்பாளர்களும் இந்த வழிபாடுகளில் கலந்துகொண்டனர்.



## பிறை நேற்று தென்படவில்லை ஓகஸ்ட் 01 ஹஜ்ஜுப் பெருநாள்

எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி ஹஜ்ஜுப் பெருநாள் தினம் என்று கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது.

கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நேற்று இடம்பெற்ற துல்ஹஜ் மாதத்துக்கான தலைப் பிறை மாநாட்டின்போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

துல்கஃதா மாதம் பிறை 29ஆம் தினமான நேற்று, இஸ்லாமிய வருடம் ஹிஜ்ரி 1441 ஆம் ஆண்டின் துல்ஹஜ் மாதத்துக்கான தலைப்பிறை இலங்கையின் எப்பகுதியிலும் தென்படாததன் காரணமாக, துல்கஃதா மாதத்தை 30 ஆகப் பூர்த்தி செய்து, நாளை துல்ஹஜ் மாதத்தின் முதலாம் நாளாகக் கொள்ளப்படும் என கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது.

அதற்கமைய துல்ஹஜ் பிறை 10 ஆம் திகதியான, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி ஹஜ்ஜுப் பெருநாள் தினமாக அனுஷ்டிக்கப்படும் எனக் கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது.

தலைப் பிறை தீர்மானிக்கும் நேற்றைய மாநாட்டில் கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறைக்குழு, அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் வக்பு சபை ஆகியவற்றின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



## மிருசுவில் பகுதியில் ரயிலுடன் மோதுண்டு 17 மாடுகள் இறந்தன

யாழ். தென்மராட்சி மிருசுவில் ஆசைப்பிள்ளை ஏற்றத்துக்கு அருகாமையில் ரயிலுடன் மோதுண்டு 17 மாடுகள் பலியாகியுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்றிரவு 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த ரயிலுடன் மோதுண்டே இந்த மாடுகள் உயிரிழந்துள்ளன.

உயிரிழந்த மாடுகளுக்கு இதுவரை எவரும் உரிமை கோரவில்லை என சாவகச்சேரி பிரதேச சபையின் வெளிக்கள மேற்பார்வை உத்தியோகத்தர் கைலாயப்பிள்ளை சிவநேசன் தெரிவித்தார்.

## க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன


க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத்தளம் ஊடாக விண்ணப்பத்தினைப் பூரணப்படுத்த வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை பி.டி.எவ்.(PDF) ஆகத் தரவிறக்கம் செய்து, அச்சுப்பிரதி எடுத்து, விண்ணப்பதாரியினதும், கிராம சேவகரினதும் கையொப்பம் இட்டு, பரீட்சைத் திணைக்களத்திற்கு தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

பாடசாலைகளில் இருந்து விடுகைப் பத்திரம் பெற்றுக் கொண்டவர்கள் மாத்திரமே தனிப்பட்ட பரீட்சார்த்தியாக விண்ணப்பிக்க தகைமை கொண்டுள்ளனர். பாடசாலையில் கற்றுக் கொண்டே தனிப்பட்ட பரீட்சார்த்தியாக விண்ணப்பிக்க முடியாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# மக்களைச் சாகடித்தேனும் வாழ நினைக்கின்றது அரசு

## கடுமையாகச் சாடுகின்றார் ரணில்



சர்வதேச நாடுகளின் அரசுகள் கொரோனா வைரஸ் பரவலினால் நெருக்கடிக்கு முகங்கொடுத்த தமது மக்களுக்கு நிவாரணங்களை வழங்கிக்கொண்டிருக்கின்றன. ஆனால், எமது அரசு நீர் மற்றும் மின்சாரக் கட்டணங்களை அதிகரித்துள்ளது. சர்வதேச நாடுகள் தமது மக்களின் நலன்களை முன்நிறுத்தி செயற்பட்டுக்கொண்டிருக்கும் தருணத்தில், எமது அரசு மக்களின் உயிர் பிரிந்தாலும் தாம் வாழவேண்டும் என்ற எண்ணத்துடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

– இவ்வாறு அரசைக் கடுமையாகச் சாடியுள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய அரசால் பொருளாதாரப் போரில் ஒருபோதும் வெற்றியடைய முடியாது. சுற்றுலாத்துறையையும், ஏற்றுமதியையும் அரசு முழுமையாக மறந்து போயிருக்கின்றது. அரச சேவையாளர்களுக்கான ஊதியத்தில் குறைப்புச் செய்யப்பட்டிருக்கின்றது.

கொரோனா வைரஸ் பரவலினால் முழு உலகமுமே ஒரு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கின்றது. ஏனைய சர்வதேச நாடுகள் அந்த நெருக்கடியிலிருந்து தமது பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கும், அதுவரையில் மக்களுக்கு அவசியமான நிவாரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

ஆனால், எமது நாட்டின் அரசு என்ன செய்திருக்கின்றது? ஆஸ்திரேலிய அரசு அனைத்துக் குடும்பங்களுக்கும் நிவாரணமாக 3 ஆயிரம் டொலர்களை வழங்கியது.

மக்கள் குறித்து சிந்திக்கின்ற, அவர்களுடைய நலன்களை முன்நிறுத்துகின்ற அரசு இவ்வாறுதான் செயற்படும். ஆனால், எமது நாட்டில் நீர் மற்றும் மின்சாரக்கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டன. மக்களின் உயிர் பிரிந்தாலும் தாம் வாழவேண்டும் என்றே அரசு நினைக்கின்றது – என்றார்.

# 'ஈஸ்டர்' தாக்குதல் திட்டமிட்ட கொலை

## சில தினங்களில் நிரூபிப்பேன் என்கிறார் ஹரின்

**கொழும்பு, ஜூலை 22**

**உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான சில முக்கிய தகவல்களை இன்னும் சில தினங்களில் நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்தவுள்ளேன். இந்தத் தாக்குதல் ஒரு திட்டமிட்ட கொலை என்பதை நான் ஆதாரபூர்வமாக நிரூபித்துக் காட்டுவேன்.**



–இவ்வாறு முன்னாள் அமைச்சரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் செயற்பாட்டாளருமான ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பதுளையில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக எம்மால் வழமையைப் போன்று சுவாசிக்கக்கூட முடியவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் தேர்தல் அவசியம்தானா? எமக்கு விருப்பமில்லாவிட்டாலும், ராஜபக்ஷக்கள் என்ற குடும்பத்தினருக்காக நாங்கள் தேர்தலைச் சந்திக்க வேண்டியுள்ளது. அவர்களது பலத்தைப் பாதுகாத்துக் கொள்ளவே இவ்வாறான நெருக்கடியான நிலைமையில் தேர்தலை நடத்துவதில் ஆர்வம் காட்டி வருகின்றார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியை ரணில் விக்கிரமசிங்க பற்றிக் கொண்டுள்ளார். அக்கட்சி அவரது தனிப்பட்ட சொத்தா? ஒருமுறையாவது அவரால் ஜனாதிபதியாக வரமுடியவில்லை. பிரதமர் பதவியைப் பெற்றுக்கொடுத்தாலும், அதனை அவரால் தக்கவைத்துக்கொள்ள முடியவில்லை. இந்த நிலையில் ஐ.தே.கவின் வெற்றிக்காக உழைத்த மக்களுக்கு என்ன செய்வது? தொடர்ந்தும் அவரிடம் இது தொடர்பில் பேசி எந்தப் பயனும் கிடைக்கவில்லை. அதனால்தான் நாங்கள் வெளியில் வந்தோம்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ சிறந்த முறையில் செயற்படுவார் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. ஜனாதிபதித் தேர்தலிலே அவர் தோல்வியடைவதற்கு உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் ஒரு காரணமாக இருந்தது. இது உண்மையாகவே திட்டமிட்ட கொலையாகும். ஜனாதிபதித் தேர்தலை வெற்றிகொள்வதற்காகவும் சஜித் பிரேமதாஸவைத் தோல்வியடையச் செய்வதற்காகவும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டதே இந்தத் தாக்குதல்.

எம் நாட்டு முஸ்லிம் மக்களுக்கு கத்தோலிக்க மக்களைக் கொலை செய்ய வேண்டும் என்ற தேவை எப்போதும் இருக்கவில்லை. இந்தத் தாக்குதல் தொடர் பில் உண்மைத் தகவலை நான் நாட்டுக்குத் தெரியப்படுத்துவேன். இது தொடர்பில் எனக்கு சில தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இன்னும் சில தினங்களில் அதனை நான் நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்துவேன். அதற்குப்பின்னர் என்னையும் மறைந்த அமைச்சர் ஸ்ரீபதி சூரிய ஆராச்சியைப் போன்று வாகன விபத்தை ஏற்படுத்தி கொலைசெய்ய முயற்சிப்பார்களோ தெரியவில்லை. அவ்வாறு நான் உயிரிழந்தாலும் ஆத்மாவாக வந்து ராஜபக்ஷக்களின் ஆட்சியை இல்லாதொழிப்பேன் – என்றார்.

# தேர்தல்கள் ஆணையாளர் ரிஷாத்துக்கு அடைக்கலம்

## இப்படி விமல் குற்றச்சாட்டு



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடன் தொடர்புடைய அரசியல்வாதிகளைப் பாதுகாக்கும் வகையில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் செயற்படுகின்றார்.

– இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

ரிஷாத் பதியுதீன் தொடர்பில் சி.ஐ.டியினர் முன்னெடுத்துவரும் விசாரணையை ஆகஸ்ட் 19 ஆம் திகதிவரை பிற்போடுமாறு பதில் பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு உள்ள அதிகாரம் என்ன எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சஹ்ரான் குழுவால் நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான விசாரணையை திட்டமிட்ட அடிப்படையில் கடந்த அரசு மூடிமறைத்தது. இது தொடர்பில் பொலிஸ் அதிகாரிகள் சாட்சியமளித்து வருகின்றனர். ஆதாரங்கள் சகிதமே ரிஷாத் பதியுதீனின் சகோதரர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்தநிலையில், ரிஷாத் பதியுதீன் கைதுசெய்யப்படப் போகின்றார் எனப் பதில் பொலிஸ்மா அதிபருக்கும், சி.ஐ.டியினருக்கும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவரே கடிதம் எழுதியுள்ளார்.

குற்றவாளியாக இருந்தாலும் ஆகஸ்ட் 10ஆம் திகதிவரை கைதுசெய்ய வேண்டாம் என்பதையே அவர் கடிதம் மூலம் கூற முற்படுகின்றார். இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு உள்ள அதிகாரம் என்ன? குற்றவியல் சட்டத்தின் பிரகாரம், குற்றச்செயலில் ஈடுபட்டவரைக் கைது செய்யும் அதிகாரம் பொலிஸாருக்கு இருக்கின்றது.

இப்படியே போனால் நாளை ரிதின் தம்பியை விடுதலைசெய்யுமாறுகூட கோரலாம். எனவே, சுயாதீனம் என்ற போர்வைக்குள் இருந்துக்கொண்டு நாட்டில் சட்டம் செயற்படுவதை இப்படிதான் தடுத்துக்கொண்டிருக்கின்றனர் – என்றார்.

# முல்லைத்தீவை ஆக்கிரமிக்கும் நோக்குடன் குறிவைத்துக் காய் நகர்த்துகின்றது அரசு

## எச்சரிக்கின்றரார் சுரேஷ் பிறேமச்சந்திரன்



*முல்லைத்தீவு, ஜூலை 22*

*தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தேர்தல் பரப்புரைக்கூட்டம் நேற்று முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் க.வி. விக்னேஸ்வரன் தலைமையில் வன்னி மாவட்ட வேட்பாளர்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் இடம்பெற்றது. இக்கூட்டத்திற்கு யாழ்ப்பாண - கிளிநொச்சி வேட்பாளர்களான சுரேஷ் பிறேமச்சந்திரன், சிவாஜிலிங்கம் , சிறீகாந்தா மற்றும் அனந்தி சசிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.*

அங்கு கலந்து கொண்டு உரையாற்றிய சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்தவை வருமாறு:–

முல்லைத்தீவு மண் என்பது ஒரு போராட்டக் களத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பலிகொடுத்த இடம். இந்தப் போராட்டம் தேவையற்ற ஒரு காரணத்துக்காக நடைபெறவில்லை. தமிழ் மக்கள் கௌரவமாக வாழ வேண்டும், தமிழ் மக்களுடைய கலை, கலாசாரம் பாதுகாக்கப்பட்ட வேண்டும், தமிழ் மக்களுடைய எதிர்காலம் சுபீட்சமாக இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் போரட்டம் நடைபெற்றது. இந்தப் போராட்டக் களத்தில் லட்சக்கணக்கான உயிர்களை கொடுத்துள்ளேம். இன்று ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் இலங்கை அரசாங்கம் மக்களுடைய மீதமுள்ள அனைத்தையும் கபளீகரம் செய்கின்றது. எமது காணிகள், நிலங்கள் அனைத்தும் பறி போகின்றன. மண்லாறு என்ற எமது நிலம் வெலி ஓயாவாக மாறியுள்ளது. தமிழ் மக்களுக்கு உரிய பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்குரிய உறுதிகள் சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. எமது மக்கள் விவசாயம் செய்யவதற்கு நிலம் இல்லாமல் இருக்கின்றார்கள். கொக்குளாய், கொக்குத்தொடுவாய் போன்ற இடங்கள் மகாவலி அபிவிருத்தி என்ற பெயரில் அரசால் கபளீகரம் செய்யப்படுகின்ற நிலை காணப்படுகின்றது. அவ்வாறு செய்யப்பட்டு வெலிஓயாவுடன் இணைப்பார்களாக இருந்தால் வடக்கும் கிழக்குக்கும் இடையில் அனுராதபுரம் என்ற மாவட்டம் வந்து சேரும். அதனால் வடக்கும் கிழக்குக்குமான நிலத்தொடர்புகள் துண்டிக்கப்படும். ஆகவே, இருப்புக்களைப் பாதுகாக்க வேண்டும்.

திருகோணமலையில் கன்னியா வெந்நீரூற்று முற்றுமுழுதாக பறிக்கப்பட்டுள்ளது. ஆடிஅமாவைசைக்குச் சென்ற மக்ககளுக்கு சம்பந்தன் தனது அரசியல் கருத்துக்களை கூறினாரே தவிர அவை பறிக்கப்பட்டுள்ள நிலையில் அதை மீட்பதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதுமட்டுமல்ல முல்லைத்தீவில் நீராவியடிப் பிள்ளையார் கோவிலில் பெரிய புத்தர் சிலை அமைக்கப்பட்டுள்ளது. வவுனியாவில் வெடுக்குநாறி மலை சிவன் கோவில் எமது கையைவிட்டு போகும் நிலையில் உள்ளது.

இப்பொழுது இராணுவம் குறிவைத்திருக்கும் இடமாக முல்லைத்தீவு மாறியுள்ளது. எமது நிலங்களை எவ்வாறு கபளீகரம் செய்வது, முல்லைத்தீவை எவ்வாறு அனுராதபுரத்துடன் இணைப்பது போன்ற நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

காணாமலாக்கப்பட்டவர்களுக்கு எந்தத் தீர்வும் பெற்றுக் கொடுக்கப்படவில்லை, அரசியல் கைதிகளுக்கு விடுதலை பெற்றுக் கொடுக்கப்படவில்லை. ஆனால், இன்று அமைச்சுப் பதவிகள் பெற தங்களை நாடாளுமன்றம் அனுப்புங்கள் என்று கேட்டு வருகின்றார்கள்.

கடந்த அரசாங்கத்தின் பங்குதாரர்களாக இருந்த கூட்டமைப்பினர் கம்ரெலியவைக் கூறி வாக்குகேட்டு வருகின்றார்கள். கம்பரெலிய என்பது வடக்கு கிழக்குக்கான அபிவிருத்தி அல்ல, முழு இலங்கைக்கும் அரசாங்கம் வழங்கிய ஒன்றாகும். ஆகவே, இவற்றை புரிந்து கொள்ளுங்கள். – என்றார்.

## தனிமைப்படுத்தப்பட்ட 149 பேர் கேப்பாபிலவிலிருந்து வீடுகளுக்கு

(சண்முகம் தவசீலன்)







முல்லைத்தீவு கேப்பாபிலவு இராணுவப்படைத்தள தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையத்தில் 14 நாள்கள் கண்காணிப்பினை நிறைவு செய்த 149 பேர் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள்.

எதியோப்பியா நாட்டிலிருந்து நாடு திரும்பியவர்கள் கட்டுநாயக்கா விமான நிலைத்தில் இருந்து தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்காக முல்லைத்தீவு கேப்பாபிலவு இராணுவப் படைத்தள தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டிருந்தனர்.

இவர்கள் 14 நாள்கள் கண்காணிப்ப மற்றும் பி.சி.ஆர். பரிசோதனையின் போது இவர்களுக்கு கொரோனாத் தொற்று கண்டறியப்படாத நிலையில் இவர்கள் நேற்று மாலை வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள்.

## நீர்கொழும்புச் சிறை மதிலுக்கு மேலால் வீசப்பட்ட பொதி மீட்பு

### நான்கு கைத்தொலைபேசிகள் போதைமாத்திரைகள் இருந்தன

நீர்கொழும்பு சிறைச்சாலையின் மதிலுக்கு மேலால் வீசப்பட்ட பொதியில் இருந்து 4 தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றைய தினம் இந்தப் பொதி வீசப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதில் இருந்து ஹெரோயின், கஞ்சா உட்பட போதை மாத்திரைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கொழும்பு சிறைச்சாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது தொலைபேசி உட்பட சில பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கைதிகளின் சிறை கூடத்தினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இந்தப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இதன்போது இரண்டு தொலைபேசிகள், 5 சிம் அட்டைகள் மற்றும் சார்ஜர் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## கொரோனா 2,730; குணமடைவு 2,064

### ஒரு மாதத்தின் பின் நேற்று எவரும் அடையாளம் காணப்படவில்லை

கொழும்பு, ஜூலை 22

இலங்கையில்கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான எவரும் நேற்று அடையாளம் காணப்படவில்லை. கடந்த 24 மணித்தியாலங்களில் 16 பேர் குணமடைந்துள்ளனர். இன்றும் இதுவரைஎவரும்அடையாளம்காணப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் 2,078 ஆவது நபராக அடையாளம் காணப்பட்ட போதைப் பொருளுக்கு அடிமையான கைதியை அடுத்து, கந்தக்காடு போதைப்பொருள் தடுப்பு புனர்வாழ்வு மத்திய நிலையத்திலும் அதனுடன் தொடர்புபட்டவர்களுமாக இதுவரை 562 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என தேசிய தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

கந்தக்காடு போதைப்பொருள் தடுப்பு புனர்வாழ்வு மத்திய நிலையத்தி மாத்திரம் இதுவரை 513 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இன்று முற்பகல் 10 மணியளவில் தேசிய தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவினால் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, கொரோனா வைரஸ் தொற்றியுள்ளதாக அடையாளம் காணப்பட்டவர்களின் எண்ணிக்கை 2,730 ஆக காணப்படுகின்றது. அத்துடன் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 2,048 இலிருந்து 2,064 ஆகக் காணப்படுகின்றது.

நேற்றும் இன்று இதுவரையும் கொரோனாத் தொற்றுக்குள்ளான எவரும் அடையாளம் காணப்படவில்லை.

இதுவரை அடையாளம் காணப்பட்டவர்களில் கடற்படை மற்றும் அவர்களுடன் நெருக்கமான 950 பேர் அடையாளம் காணப்பட்டனர். அவர்களில் 906 பேர் கடற்படையினராவர். அவர்கள் அனைவரும் தற்போது குணமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அடையாளம் காணப்பட்ட 2,730 தொற்றாளர்களில், வெளிநாட்டவர் 31 பேர் மற்றும் வெளிநாடுகளிலிருந்து வந்த இலங்கையர் 874 பேர் உள்ளிட்ட வெளிநாடுகளிலிருந்து வந்த 905 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அந்தவகையில், இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றியதாக அடையாளம் காணப்பட்டவர்களில் தற்போது 655 நோயாளிகள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 2,064 பேர் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர். அத்துடன் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனிடையே வைத்தியசாலைகளில் கொரோனா வைரஸ் சந்தேகத்தில் 94 பேர் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகம் அறிவித்துள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.07.2020 இல் வெளியிடப்பெற்றது.